# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 343 | 4 Pages | 6.7.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 343 | 4 பக்கங்கள் | 6.7.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## மக்களுடன் முதல்வர் திட்டம்: எம்.பி., எம்.எல்.ஏ.க்களுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு



சென்னை, ஜூலை 6

மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு அனைத்து கட்சி எம்.பி,. எம். எல்.ஏ.க்களுக்கும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது;

வருகிற 11ம் தேதியன்று மக்களுடன் முதல்வர் விரிவாக்க நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறேன். வரும் 15ம் தேதியன்று திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரின்காலைஉணவுதிட்டவிரிவாக்க நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளில் முதல் அமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்க நிகழ்ச்சி நடைபெறுகிறது. விழுப்புரம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அன்றைய தினம் அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர்கள் இந்த விழாவினை தொடங்கி வைப்பார்கள். இந்த நிகழ்ச்சியில் அந்தந்த பகுதி எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேலம் அதிமுக நிர்வாகி படுகொலை: எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சேலம், ஜூலை 6

சேலம் மாநகராட்சி தாதகாப்பட்டியை அடுத்த தாகூர் தெருவை சேர்ந்தவர் சண்முகம் (வயது 64). இவர் நேற்று இரவு கட்சி அலுவகத்தில் இருந்து வீடு திரும்பியபோது மர்ம கும்பல் ஒன்று கொடூரமாக வெட்டி படுகொலை செய்தது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் 9 பேரை கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், இந்த படுகொலை சம்பவத்துக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். இது



தொடர்பாக அவர் தெரிவித்து இருப்பதாவது;

"தமிழ்நாட்டில் சட்டம்ஒழுங்கை பாதுகாக்க எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு அடைந்துள்ளது. தினசரி கொலை, கொள்ளை சம்பவங்கள் நடைபெறுவது வாடிக்கையாக உள்ளது.

தெரு விளக்குகளை துண்டித்தும், சிசிடிவி கேமராக்களை உடைத்தும் திட்டமிட்டு கொடூர முறையில் அதிமுக நிர்வாகி படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலை சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து குற்றவாளிகளையும் உடனடியாக கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறந்த தொண்டரான சண்முகத்தை இழந்திருப்பது மிகுந்த மன வேதனை தருகிறது. சண்முகத்தை இழந்துவாடும் உறவினர்கள், கட்சி தொண்டர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல் அ.தி.மு.க.வினர் பா.ம.க.வுக்கு வாக்களிக்க வேண்டும்...ராமதாஸ்

திண்டிவனம், ஜூலை 6

திண்டிவனம் அருகே தைலாபுரம் தோட்டத்தில் இன்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது,

தி.மு.க. விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அத்துமீறல்களில் ஈடுபட்டுள்ளது.பா.ம.க. கூட்டத்திற்கு வரும் பெண்களை அடைத்து வைப்பது, உள்ளாட்சி பிரதிநிதிகளை மிரட்டுவது என தி.மு.க. அமைச்சர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த அத்துமீறல்களை முறியடித்து பா.ம..க



வேட்பாளர் 40 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறுவார்.அ.தி.மு.க.வின் நோக்கமும் பா.ம.க.வின் நோக்கமும் இத்தேர்தலில் ஒன்றாகவே உள்ளது. எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் தி.மு.க.வை தீய சக்தி என்று கற்றுகொடுத்தனர். அந்த தீய சக்தியை வீழ்த்தும் வலிமை பாமகவிற்கு உண்டு.

எனவே பா.ம.க.வின் மாம்பழ சின்னத்தில் அ.தி.மு.க.வினர் வாக்களிக்க வேண்டும். தி..மு.க தோல்வி அடைந்துவிடும் என்று தெரிந்ததால் தான் முதல்அமைச்சர் பிரச்சாரத்திற்கு வரவில்லை என தெரிகிறது. அப்படியே பிரச்சாரம் செய்தாலும் தி.மு.க தோல்வி அடையும்

நீட் தேர்வை ரத்து செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்காத தமிழக முதல்அமைச்சர் மாணவர்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்.சாதிவாரி கணக்கெடுப்பை இல்லாத காரணங்களை காட்டி தட்டிகழிக்கும் அரசு பதவி விலகவேண்டும். இடைத்தேர்தலுக்கு பின் மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கிறது. இந்த இடைத்தேர்தலில் தி.மு.க தோல்வி அடைந்தால் மின்கட்டண உயர்வை அரசு கைவிடும்.இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பூரில் மையப்பகுதியில் செயல்படும் பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்

உடுமலை, ஜூலை 6

உடுமலை கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், பெதப்பம்பட்டியில் கால்நடை சிகிச்சை வளாகம் உள்ளது. இங்கு செல்லப்பிராணிகளுக்கு தடுப்பூசி என்ற சுழல் நிதித் திட்டத்தை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக சிகிச்சையியல் இயக்குநர் டி.சத்தியமூர்த்தி, கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் குமாரவேல் ஆகியோர் துவங்கி வைத்தனர்.

இத்திட்டத்தின் மூலம் வெறிநோய் தடுப்பூசி, டிஎச்பிபிஐஎல் தடுப்பூசி மற்றும் பூனைகளுக்கான தடுப்பூசிகள் மானிய கட்டண முறையில் காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை போடப்படும். விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் 11 மணி வரை போடப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, கால்நடை சிகிச்சை தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு பற்றிய மென்பொருள் பயன்பாட்டுக்காக துவங்கி வைக்கப்பட்டது. இதனை செல்லப்பிராணிகள் வளர்ப்போர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## திருப்பூரில் எலாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம்

திருப்பூர், ஜூலை 6

திருப்பூர் எலாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம், திருப்பூரில் நடைபெற்றது. இதற்கு தலைவர் கோவிந்தசாமி தலைமை தாங்கி பேசினார். செயலாளர் சௌந்தர்ராஜன் முன்னிலை வகித்தார். இதில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழக திருப்பூர் கிளை லட்சுமி நாராயணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார்.

பொருளாளர் செல்வராஜ் வரவு, செலவு கணக்கு தாக்கல் செய்தார். சிறு, குறு தொழில் நிறுவனங்கள் தங்கள் பில் தொகையை 45 நாட்களுக்குள் பெறலாம் என்ற மத்திய அரசின் உத்தரவை தொடர்ந்து அமல்படுத்த வேண்டும். திறன்மிகு தொழிலாளர்களை உருவாக்க உற்பத்தியை மேம்படுத்த பயிற்சி மையம் ஆரம்பித்து, மற்ற அமைப்புடன் சேர்ந்து செயல்படுவது என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



குன்னூரில் தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையினரால் குன்னூர் பேருந்துநிலையம் மற்றும் தீயணைப்புத் துறை வளாகத்தில் நடைப்பெற்றது இந்த நிகழ்வில் குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் சதீஷ் மற்றும் வட்டாச்சியர் கணிசுந்தரம் தீயணைப்பு மீட்பு பணிகள் துறை நிலைய அலுவலர் குமார் மற்றும் மீட்பு படைவீரர்கள் கலந்துகொண்டனர்.

## உறவினருடன் கள்ளக்காதல்; முன்னாள் காதலர் மிரட்டல்... பெண் எடுத்த முடிவு?

கோரக்பூர், ஜூலை 6

உத்தர பிரதேசத்தின் கோரக்பூர் நகரில் வசித்து வருபவர் பிரியங்கா நிஷாத். இவருடைய உறவினர் பிரிஜேந்திரா நிசாத். பிரியங்காவுக்கு அவருடைய மருமகன் உறவு முறை கொண்ட பிரிஜேந்திராவுடன் கள்ளக்காதல் ஏற்பட்டு உள்ளது. இந்த நிலையில், பிரியங்காவுக்கு சிந்து குமார் என்ற முன்னாள் காதலர் ஒருவர் இருந்திருக்கிறார்.

இவர்கள் இருவர் இடையேயான தொடர்பை அறிந்ததும் அவர் கோபப்பட்டு இருக்கிறார். தனியாக இருந்தபோது எடுத்த ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வெளியிட்டு விடுவேன் என பிரியங்காவை மிரட்டி தன்னுடைய கட்டுக்குள் கொண்டு வர முயன்றிருக்கிறார்.

இதனால் சிந்து, கள்ளக்காதலுக்கு தடையாக இருப்பார் என உணர்ந்த பிரியங்கா திட்டம் ஒன்றை தீட்டியுள்ளார். இதன்படி சென்னையில் இருந்த சிந்துவை சில நாட்களுக்கு முன் ஊருக்கு வரும்படி பிரியங்கா அழைத்திருக்கிறார். சிந்துவும் வீட்டில் பெங்களூருவுக்கு செல்கிறேன் என கூறி விட்டு காதலியை பார்க்க கோரக்பூர் சென்றிருக்கிறார்.

சிந்து சென்றதும் பிரிஜேந்திரா, ஆகாஷ் குமார் மற்றும் சிவகுமார் ஆகியோருடன் சேர்ந்து பிரியங்கா அவரை கடுமையாக அடித்து, தாக்கியுள்ளார். இதில் சிந்து உயிரிழந்ததும் அவருடைய உடலை குளத்தில் வீசி விட்டு சென்றுள்ளனர்.

அவருடைய உடலை கைப்பற்றிய போலீசார், சிந்துவின் பர்ஸ், ஆதார் அட்டை மற்றும் கொலைக்கு பயன்படுத்திய ஆயுதம் ஆகியவற்றையும் கைப்பற்றினர். சமூக ஊடகங்களில் சிந்துவின் புகைப்படங்களை வெளியிட்டு அவரை அடையாளம் காண முயன்றனர். அப்போது, சிந்துவின் தந்தை வந்து அடையாளம் காட்டியுள்ளார்.

இதன்பின்னரே, போலீசாரின் விசாரணையில் சிந்துவின் காதல் விவகாரம் தெரிய வந்துள்ளது. இதனை தொடர்ந்து, பிரியங்கா, உறவினர் மற்றும் 2 கூட்டாளிகள் என 4 பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

## துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கார் கேரளாவில் 2 நாட்கள் சுற்றுப்பயணம்



புதுடெல்லி, ஜூலை 6

துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கார் மற்றும் அவருடைய மனைவி சுதேஷ் தன்கார் இருவரும் நாளை மற்றும் நாளை மறுநாள் (6 மற்றும் 7) ஆகிய 2 நாட்கள் கேரளாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றனர்.

இந்த பயணத்தின், முதல் நாளில் இந்திய விண்வெளி மையம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் (ஐ.ஐ.எஸ்.டி.) 12வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இந்த நிகழ்ச்சியில், அவர் சிறந்த மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்குகிறார்.

இதன்பின்பு, அடுத்தநாள் கொல்லம் மற்றும் அஷ்டமுடி பகுதிகளுக்கு துணை ஜனாதிபதி தன்கார் செல்கிறார். இதனை துணை ஜனாதிபதியின் செயலகம் வெளியிட்டு உள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

## இந்திய கிரிக்கெட் அணியை வரவேற்க சென்ற 10 ரசிகர்கள் மருத்துவமனையில் அனுமதி




மும்பை, ஜூலை 6

9வது டி20 உலகக்கோப்பை தொடரில் ரோகித்சர்மா தலைமையிலான இந்திய அணி, தென்ஆப்பிரிக்காவுக்கு எதிரான இறுதி போட்டியில் அதிரடியாக விளையாடி, கோப்பையை வென்று அசத்தியது. ரோகித் சர்மா தலைமையில் 17 வருடங்கள் கழித்து, இந்த சாதனை படைக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், இந்திய அணி வீரர்கள் தனி விமானம் மூலம் இன்று டெல்லி வந்தடைந்தனர். பிரதமர் மோடியை நேரில் சந்தித்தனர். அவர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து இன்று மாலை மும்பையில் இந்திய வீரர்கள் பேரணியாக, திறந்தநிலையிலான பஸ்ஸில் டி20 உலகக்கோப்பையுடன் வெற்றி பேரணியாக வலம் வந்தனர். அவர்களை காண்பதற்காக, கொட்டும் மழைக்கு இடையே லட்சக்கணக்கான ரசிகர்கள் குவிந்தனர்.

இந்திய அணிக்காக இளைஞர்கள் பாடல்களை பாடியதுடன், பாரத் மாதா கி ஜெய் மற்றும் வந்தே மாதரம் போன்ற கோஷங்களையும் எழுப்பினர். இதேபோன்று, மரைன் டிரைவ் பகுதியின் சாலைகளில் இரு புறமும் ரசிகர்கள் குவிந்தனர்.

மும்பையின் மரைன் டிரைவ் பகுதியில் இருந்து வான்கடே மைதானம் வரை பேரணி நடைபெற்றது. வான்கடே மைதானத்திற்கு வீரர்கள் வந்ததும் கூடியிருந்த ரசிகர்கள் உற்சாக கோஷம் எழுப்பினர். மும்பையில் வீரர்களுக்கு வான்கடே மைதானத்தில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இதன்பின் வீரர்களுக்கு ரூ.125 கோடிக்கான காசோலையை பி.சி.சி.ஐ. வழங்கியது. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியை வரவேற்க சென்றதில் பல்வேறு ரசிகர்களுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. சிலருக்கு காயம் ஏற்பட்டு உள்ளது. சிலருக்கு சுவாசிப்பதில் பாதிப்பு ஏற்பட்டது. 10 பேர் அருகேயுள்ள அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் 2 பேரில் ஒருவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு உள்ளது. மற்றொரு நபருக்கு சுவாச பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என மும்பை போலீசார் தெரிவித்து உள்ளனர்.

# நாளை காதலியை கரம் பிடிக்க இருந்த நிலையில் விஷம் குடித்து மணமகன் தற்கொலை

நாகை, ஜூலை 6

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் கஞ்சமலைத் தெரு பகுதியைச் சேர்ந்தவர் அருள்மணி(வயது 31). எலக்ட்ரிசீயனான இவரும், வேதாரண்யம் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த ஒரு பெண்ணும் கடந்த 3 ஆண்டுகளாக காதலித்து வந்தனர்.

இவர்களின் காதலுக்கு இருவீட்டாரும் சம்மதம் தெரிவித்தனர். இதை தொடர்ந்து இவர்களுக்கு நாளை மறுநாள்(ஞாயிற்றுக்கிழமை) திருமணம் நடைபெற இருந்தது. இரு வீட்டாரும் திருமண அழைப்பிதழை தங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு கொடுத்து வந்தனர். இந்த நிலையில் திருமண செலவிற்கு பணம் இல்லாததால் மணமகன் அருள்மணி மன உளைச்சலில் இருந்து வந்தார்.

வீட்டில் இருந்து வெளியே சென்ற அருள்மணி மாலையில் வீட்டுக்குதிரும்பிவரவில்லை. நாளை மறுநாள் திருமணம் நடக்க இருந்த நிலையில் மணமகனை காணாததால் இருவரின் உறவினர்களும் அவரை பல்வேறு இடங்களில் தேடினர். அப்போது புஷ்பவனம் கடற்கரையில் அருள்மணி மயங்கி கிடந்தார்.

உடனடியாக உறவினர்கள், அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் நாகை அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள், ஏற்கனவே அருள்மணி இறந்து விட்டதாக தெரிவித்தனர். அருள்மணி மயங்கி கிடந்த இடத்தில் விஷப்பாட்டில் கிடந்ததால் அவர் விஷம் குடித்து இறந்திருக்கலாம் என டாக்டர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த வேதாரண்யம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் மற்றும் போலீசார் சம்பவஇடத்துக்குசென்று அருள் மணி உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாளை மறுநாள் தனது காதலியை கரம் பிடிக்க இருந்த நிலையில் திருமண செலவுக்கு பணம் இல்லாததால் மணமகன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் உறவினர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மக்கள் பணியை தொய்வின்றி தொடர்வோம்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, ஜூலை 6

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:



திமுக இளைஞர் அணிச் செயலாளராக இன்று ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன். உறுப்பினர் சேர்க்கை, கிளை வார்டுகளுக்கும் நிர்வாகிகளை நியமித்தது, கைவிடப்பட்ட நீர்நிலைகளைச் சீரமைத்தது, கொரோனா கால நலத்திட்ட உதவிகள், நீட் தேர்வுக்கு எதிரானதொடர் போராட்டங்கள், திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், தமிழ்நாடு முழுவதும் நேர்காணல் நடத்தி, மாவட்ட அளவிலான நிர்வாகிகளைத் தேர்வு செய்தது,

இரண்டாவது மாநில மாநாடு, இல்லந்தோறும் இளைஞர் அணி முன்னெடுப்பு, சமூக வலைத்தளத்தில் இயங்கும் தன்னார்வலர்களை ஒருங்கிணைப்பது, முரசொலி பாசறைப் பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், தொகுதிதோறும் கலைஞர்நூலகம், தேர்தல் பிரச்சாரங்கள்... மனதுக்கு நெருக்கமான பல பணிகளை செய்துள்ளோம் என்ற வகையில் மகிழ்வாக உள்ளது.

இந்த வாய்ப்பை வழங்கிய திமுக தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணியினரைக் களத்தில் உற்சாகப்படுத்தி ஒருங்கிணைக்கும் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினுடைய அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி. கழகப் பணிகள் அனைத்திலும் எனக்கு உறுதுணையாக நிற்கும் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு என் அன்பும் வாழ்த்தும். மக்கள் பணி, கழகப் பணியை தொய்வின்றி தொடர்வோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருச்சியில் தொழிலாளி கத்தியால் குத்திக்கொலை

திருச்சி, ஜூலை 6

திருச்சி காந்தி மார்க்கெட் அருகே உள்ள வடக்கு தாராநல்லூரை சேர்ந்தவர் சுரேஷ் (வயது 40). சுமை தூக்கும் தொழிலாளி. இந்த நிலையில் நேற்று இரவு காந்தி மார்க்கெட் பகுதியில் டீ சாப்பிடுவதற்காக சுரேஷ் சென்றார். அப்போது அங்கு வந்த அவரது மைத்துனர் சந்திரகுமாருக்கும் (52), சுரேசுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் தகராறு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். சந்திரகுமார் கத்தியால் சுரேசை குத்தியதாக கூறப்படுகிறது. இதில் ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்த அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வந்தனர். அங்கு டாக்டர்கள் அவரை பரிசோதனை செய்துவிட்டு, சுரேஷ் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். காந்திமார்க்கெட் போலீசார் சந்திரகுமாரை பிடித்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

# பூட்டிய வீட்டில் தாய்மகன் பிணமாக மீட்பு: மாந்திரீகம் நடந்ததா? என விசாரணை

பெரம்பலூர், ஜூலை 6

பெரம்பலூர் வெள்ளாளர் தெருவை சேர்ந்தவர் செல்வராஜ். இவருக்கு பெரம்பலூர் முத்துநகரில் சொந்தமாக வீடுகள் உள்ளன. அந்த வீடுகளை அவர் வாடகைக்கு விட்டிருந்தார். அதில் ஒரு மாடி வீட்டில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை சேர்ந்த சர்வானந்தம் என்பவரின் மனைவி ஆனந்தியும் (வயது 66), மகன்ஸ்ரீராம்குமாரும் (34) கடந்த ஒரு ஆண்டாக வசித்து வந்தனர்.

ஸ்ரீராம்குமார் திருச்சியில் புகைப்பட கலைஞராக பணிபுரிந்து வந்தார். அவருக்கு திருமணமாகவில்லை. நேற்று காலை அந்த வீட்டில் இருந்து கடும் துர்நாற்றம் வீசதொடங்கியது. இதனால் அக்கம், பக்கத்தினர் இதுகுறித்து பெரம்பலூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் வீட்டின் கதவை திறக்க முயன்றனர். ஆனால் வீட்டின் கதவு உள்புறமாக தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது.

இதையடுத்து போலீசார் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அப்போது அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வீட்டின் ஹாலில் ஆனந்தியின் உடல் அழுகிய நிலையில் கிடந்தது. படுக்கை அறையில் ஸ்ரீராம்குமார் தூக்கில் பிணமாக தொங்கி கொண்டிருந்தார். வீட்டில் தாயும்மகனும் இறந்து கிடந்த தகவல் அந்த பகுதியில் காட்டுத்தீ போல் பரவியது. இதனால் அங்கு பொதுமக்கள் கூட்டம் கூடியது. பின்னர் போலீசார் கூட்டத்தை கலைத்துவிட்டு, உடல்களை பார்வையிட்டு விசாரணையை தொடங்கினர்.

மேலும் சம்பவ இடத்திற்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஷ்யாம்ளா தேவியும் வந்து பார்வையிட்டு விசாரணை நடத்தினார்.

அப்போது ஆனந்தியின் உடலின் மேல் துணி போர்த்தப்பட்டிருந்தது. மேலும் அவரது உடலை சுற்றி தர்ப்பை புல், எலுமிச்சைப்பழம், மிளகாய், தேங்காய், மஞ்சள் தூள், மிளகாய் பொடி, மல்லி பொடி, ஆரஞ்சுப்பழம், உப்பு உள்ளிட்ட பொருட்கள் சுற்றி போடப்பட்டிருந்தன.

இதனால் தாய் ஆனந்தியை கொலை செய்து விட்டு மாந்திரீகம் செய்து விட்டு மகன் ஸ்ரீராம்குமார் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது ஆனந்தி இறந்ததை வெளியே கூறாமல் அவருக்கு வீட்டில் இறுதிச்சடங்கு செய்து விட்டு ஸ்ரீராம்குமாரும் தற்கொலை செய்து கொண்டாரா? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து வீட்டில் நடத்திய போலீசாரின் சோதனையில் ஒரு கடிதம் சிக்கியது. அந்த கடிதத்தில் ஆனந்தியின் குடும்பத்தை பற்றி உருக்கமாக எழுதப்பட்டிருப்பதாக போலீசார் தெரிவித்தனர். அந்த கடிதத்தை வைத்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். வீட்டில் தாய்மகன் இறந்து கிடந்த சம்பவம் பெரம்பலூரில் பெரும் சோகத்தையும்,பரபரப்பையும் ஏற்படுத்தியது.

# மின்னணு பணப்பரிவர்த்தனை மூலம் அதிக டிக்கெட் வழங்கும் பஸ் கண்டக்டர்களுக்கு பரிசுத்தொகை

சென்னை, ஜூலை 6

அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன், அனைத்து கிளை மேலாளர்கள் உள்ளிட்டோருக்கு அனுப்பி உள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:



அரசு விரைவு பஸ்களில் கடந்த ஏப்ரல் 1ந் தேதி முதல் மின்னணு பயணச்சீட்டு கருவி (இ.டி.எம்.) மூலம் பயணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது. இக்கருவியில் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, 'கியூ ஆர்' குறியீடு ஆகியவற்றின் மூலம் பணம் செலுத்தி பயணச்சீட்டு பெறுவதை ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு மாதமும் இம்முறையில் அதிகபட்சமாக மின்னணு பணப்பரிவர்த்தனை மூலம் பயணச்சீட்டு வழங்கும் கண்டக்டர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியாத திமுக அரசு விலக வேண்டும் :அன்புமணி

சென்னை, ஜூலை 6

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூரை அடுத்த டி.குமாரமங்கலம் என்ற இடத்தில் விற்பனை செய்யப்பட்ட கள்ளச்சாராயத்தை குடித்த ஜெயராமன் என்ற முதியவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்த ஜெயராமனின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும் தரமான மருத்துவம் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் இருவரும் விரைவாக நலம் பெற விழைகிறேன். கள்ளக்குறிச்சி நகரம் கருணாபுரத்தில் கடந்த மாதம் 19ம் தேதி தான் மெத்தனால் கலக்கப்பட்ட நச்சு சாராயம் குடித்து 65 பேர் உயிரிழந்தனர்.அந்த பெரும் சோகம் நிகழ்ந்து 10 நாட்களிலேயே , ஜூன் 29ம் நாள் டி.குமாரமங்கலத்தில் விற்கப்பட்ட கள்ளச்சாராயத்தை குடித்து ஒருவர் உயிரிழந்திருப்பது வேதனையை அதிகரிக்க செய்கிறது. கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சாவுகளைத் தொடர்ந்துதமிழ்நாடுமுழுவதும் கள்ளச்சாராய வணிகத்தை கட்டுப்படுத்த தீவிர சோதனைகள் நடத்தப்பட்டதாக தமிழக அரசு மற்றும் காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கள்ளக்குறிச்சிக்கு மிக அருகிலேயே எத்தனால் கலக்கப்பட்ட கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே கள்ளச்சாராய விற்பனை தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு தலைவிரித்தாடுகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயம் குடித்து எவ்வளவு பேர் உயிரிழந்தாலும், கள்ளச்சாராய விற்பனையை கட்டுப்படுத்தமாட்டோம் என்ற மனநிலையில் தமிழக அரசும், காவல்துறையும் இருப்பதையே டி.குமாரமங்கலம் கள்ளச்சாராய சாவு காட்டுகிறது. கள்ளச்சாராய வணிகத்துக்கு ஆளுங்கட்சியின் ஆதரவு இருப்பதற்கு டி.குமாரமங்கலத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்பட்டது தான் சான்று ஆகும்.

விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் குடித்து முதியவர் உயிரிழந்தது தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி விடும் என்பதால், இதை மூடி மறைக்க முயற்சிகள் நடக்கின்றன. டி.குமாரமங்கலத்தை சேர்ந்த முருகன் என்பவர் புதுவையிலிருந்து வாங்கி வந்த மதுவை குடித்ததால் தான் முதியவர் ஜெயராமன் உயிரிழந்ததாக காவல் துறை பொய்யான தகவல்களை கூறியுள்ளனர். இதை உயிரிழந்த ஜெயராமனின் மருமகன் மறுத்திருப்பதுடன், தங்கள் பகுதியில் கள்ளச்சாராயம் தாராளமாக விற்பனை செய்யப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்த முடியாத திமுக அரசு பதவி விலக வேண்டும்.

தமிழ்நாட்டில் கள்ளச்சாராய விற்பனையை திமுக அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் விலக வேண்டும். மேலும் கள்ளச்சாராய வணிகர்களுக்கு ஆளும் கட்சியின் ஆதரவு இருப்பதாக கூறப்படும் நிலையில், தமிழ்நாட்டு காவல்துறை விசாரணை நடத்தினால் உண்மை வெளிவராது என்பதால் தான் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சாவுகள் குறித்து சிபிஐ விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். எனவே, கள்ளச்சாராய சாவுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த தமிழக அரசு ஆணையிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கள்ளக்காதலியின் கணவரை கத்தியால் குத்திய கொத்தனார் கைது



தக்கலை, ஜூலை 6

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள மாறாங்கோணம் பகுதியைச் சேர்ந்தவர் ராஜேந்திரன் (வயது 34), கொத்தனார். இவர் மெர்லின்சீத்தா(30) என்பவரை காதலித்து திருமணம் செய்தார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். ராஜேந்திரனுடன் கொத்தனார்வேலைக்கு செல்லும் குமாரபுரத்தை சேர்ந்த ரீகன் ஜோய் (30) என்பவர் அடிக்கடி ராஜேந்திரனின் வீட்டுக்கு வந்து சென்றுள்ளார்.

அப்போது மெர்லின் சீத்தாவுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது. இதை அறிந்த ராஜேந்திரன், மனைவியை கண்டித்ததோடு ரீகன் ஜோயிடம் உள்ள நட்பையும் துண்டித்தார்.

ஆனாலும் ரீகன் ஜோயும், மெர்லின் சீத்தாவும் கள்ளத்தொடர்பை விடாமல் தொடர்ந்தனர். ஒரு கட்டத்தில் $1\frac{1}{2}$ ஆண்டுக்கு முன்பு கணவரை விட்டு பிரிந்த மெர்லின் சீத்தா, கள்ளக்காதலனுடன் சென்று குடும்பம் நடத்தினார். இதனால் ராஜேந்திரன் தனிமையில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த மாதம் 5ந் தேதி இரவு 7 மணிக்கு ராஜேந்திரன் மணக்காவிளைக்கு சென்று கொண்டிருந்தார். அங்கு மணலிக்கரை சந்தையில் வைத்து தனது காதல் மனைவி மெர்லின் சீத்தா, ரீகன் ஜோயுடன் நிற்பதை பார்த்து ஆத்திரமடைந்தார். உடனே ராஜேந்திரன், மெர்லின் சீத்தாவுடன் சென்று இப்படி ஏமாற்றி விட்டாயே என கூறி தகராறில் ஈடுபட்டுள்ளார். அப்போது இவன் உயிரோடு இருந்தால் நம்மை வாழ விட மாட்டான் என மெர்லின் சீத்தா கூற, அருகில் நின்ற ரீகன் ஜோய் திடீரென கையில் வைத்திருந்த கத்தியால் ராஜேந்திரனின் வயிற்றில் குத்தினார். இதில் அவர் குடல் சரிந்து கீழே விழுந்தார்.

இதை பார்த்த அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தனர். அதற்குள் ரீகன் ஜோயும், மெர்லின் சீத்தாவும் அங்கிருந்து தப்பி சென்றனர். பின்னர் படுகாயமடைந்த ராஜேந்திரனை பொதுமக்கள் மீட்டு ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்த புகாரின்பேரில் ரீகன் ஜோய், மெர்லின் சீத்தா ஆகிய 2 பேர் மீது கொலை முயற்சி உள்பட 3 பிரிவுகளில் கொற்றிக்கோடு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையே ராஜேந்திரன் தன்னை தாக்கியதாக கூறி தக்கலை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த மெர்லின் சீத்தாவை 2 நாட்களுக்கு பிறகு போலீசார் கைது செய்தனர். ஆனால் கள்ளக்காதலன் ரீகன் ஜோய் தலைமறைவானார். அவரை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடிவந்தனர்.

கேரளாவிற்கு தப்பிச் செல்வதற்காககுழித்துறை ரெயில் நிலையத்தில் நின்ற ரீகன் ஜோயை தனிப்படை போலீசார் மடக்கி பிடித்து கைது செய்தனர். பின்னர் அவரை பத்மநாபபுரம் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சென்னை: பால்கனி இடிந்து விழுந்து முதியவர் உயிரிழப்பு

சென்னை, ஜூலை 6

சென்னை வடபழனி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட என்.ஜி.ஓ. காலனிகணேஷ்அவென்யூ பகுதியில் சுமார் 25 வருட பழைய கட்டிடம் ஒன்று உள்ளது. இந்த கட்டிடத்தின் முதல் தளத்தில் விஜயலட்சுமி என்ற பெண் வசித்து வருகிறார். இந்த நிலையில் விஜயலட்சுமி பூ வியாபாரி கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் பால்கனியில் இருந்தவாறு பூ வாங்கியுள்ளார். இந்த நிலையில் அப்போது திடீரென பால்கனி இடிந்து விழுந்தது. இதில் கீழே இருந்தபூவியாபாரிகிருஷ்ணமூர்த்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பால்கனியில் இருந்து விழுந்த விஜயலட்சுமிக்கு இடுப்பில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வடபழனிபோலீசார்கிருஷ்ணமூர்த்தியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக வீட்டின் உரிமையாளரிடம் போலீசார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# டிஜிட்டல் பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் அரசு பேருந்து நடத்துநர்களுக்கு பரிசு

சென்னை, ஜூலை 6

அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் கடந்த ஏப்ரல் 1ம் தேதி முதல் மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் மூலம் பயணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.தற்போது குறிப்பிட்ட பேருந்துகளில் அரசு விரைவு போக்குவரத்து கழகப் பேருந்துகளில் இந்த வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கூகுள் பே, போன் பே போன்றவற்றின்மூலம்பணம்செலுத்தி பேருந்துகளில் பயணச்சீட்டு பெற்றுக்கொள்ளலாம்.

இந்நிலையில், பயணிகளிடம் டிஜிட்டல் பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் நடத்துநர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், அரசு பேருந்துகளில், ஒவ்வொரு மாதமும் அதிகபட்சமான மின்னணு பணப்பரிவர்த்தனை எண்ணிக்கை மூலம் பயணிகளுக்குப் பயணசீட்டு வழங்கும் நடத்துநர்களுக்குப் பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் கொலை, கொள்ளை சர்வசாதாரணமாக நடக்கிறது: சசிகலா



சென்னை, ஜூலை 6

சசிகலா 'எக்ஸ்' சமூகவலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

சேலம் மாவட்டம் தாதகாபட்டியை அடுத்த சஞ்சீவி ராயன் பேட்டையைச் சேர்ந்த சண்முகம் என்பவரை 4 பேர் கொண்ட கும்பல் பயங்கர ஆயுதங்களால் சரமாரியாக தாக்கி படுகொலை செய்திருப்பது மிகவும் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சண்முகம் கொலை செய்யப்பட்டு இருப்பதாக அந்த பகுதியினர் சந்தேகிக்கின்றனர். அதேநேரம், விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயத்தை குடித்த ஜெயராமன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தி வருத்தமளிக்கிறது.

தி.மு.க. ஆட்சியில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை. கொலை, கொள்ளை சர்வ சாதாரணமாக நடக்கிறது. தமிழகத்தில் தலைவிரித்து ஆடும் போதைப் பொருட்கள் நடமாட்டத்தையும், கள்ளச்சாராய விற்பனைகளையும் அரசு கட்டுப்படுத்ததவறினால், அதன்பிறகு தமிழகத்தையும், தமிழக மக்களையும் காப்பாற்ற முடியாத வகையில் பேரபாயத்தை ஏற்படுத்திவிடும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நாளுக்கு நாள் சீரழிந்து வருவதை தடுக்க, தி.மு.க. அரசு தேவையான அனைத்து கடுமையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# 2,000 லிட்டர் மெத்தனால் பதுக்கல்: பெட்ரோல் பங்கிற்கு சீல் வைப்பு

சென்னை, ஜூலை 6

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்து 229 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களில் 65 பேர் உயிரிழந்தனர். 150 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தற்போது சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 8 பேரும், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 6 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகத்தையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவம் தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இது ஒருபுறம் இருக்க, ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைக்கப்பட்டு, இச்சம்பவம் தொடர்பாக அவர் விசாரணை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மாதேஷை காவலில் எடுத்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது அவர் பண்ருட்டி அருகே ஒரு பெட்ரோல் பங்கில் மெத்தனால் மற்றும் ரசாயனம் பதுக்கி வைத்துள்ளதாக வாக்குமூலம் அளித்தார்.

அதன்பேரில் பண்ருட்டி அருகே வீரப்பெருமாநல்லூரில் பயன்பாட்டில் இல்லாத பெட்ரோல் பங்கிற்கு சென்ற போலீசார் அங்கு சோதனை நடத்தினர். அப்போது கீழே புதைக்கப்பட்டிருக்கும் பெட்ரோல் டேங்கில் 2,000 லிட்டர் மெத்தனால் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அதை பறிமுதல் செய்தனர். மேலும் பெட்ரோல் பங்கிற்கு தற்காலிகமாக சீல் வைத்தனர். தொடர்ந்து பெட்ரோல் பங்கில் உள்ள அனைத்து டேங்குகளையும் ஆய்வு செய்ய போலீசார் முடிவு செய்துள்ளனர்.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் ஒரு பக்கம் பண பலமும், ஆட்சி பலமும் சூழ்ந்துள்ளது: அன்புமணி ராமதாஸ்

விக்கிரவாண்டி, ஜூலை 6

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வருகிற 10ந்தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில், விக்கிரவாண்டியில் பாமக சார்பில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் அதன் தலைவர் அன்புமணி ராமதாஸ் பேசியதாவது;



"தமிழ்நாட்டில் சமூக நீதிக்கு ஆபத்து வந்துள்ளது. திமுகவிற்கு சமூக நீதி பற்றி பேச எந்த தகுதியும் இல்லை. தேர்தல் வந்தால் பொய் வாக்குறுதிகளை கூறுவார்கள். பின்னர் அதை மறந்துவிடுவார்கள்.

திமுக என்றால் பொய் வாக்குறுதி அளிப்பவர்கள். 69 சதவீத இட ஒதுக்கீடு ரத்தானால் தமிழ்நாட்டில் திமுக என்ற கட்சியே இருக்காது.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் ஒரு பக்கம் பண பலமும், ஆட்சி பலமும் சூழ்ந்துள்ளது. `பாமக கூட்டணி பலத்தையே நம்பி இந்த தேர்தலை எதிர்கொள்கிறது." இவ்வாறு அவர் பேசினார்.

## கிருஷ்ணகிரி அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

சென்னை, ஜூலை 6

தமிழக அரசு வெளியிட்டுள்ள இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திற்கான பாசன நீர் வழங்கு விதிகளின்படி, நீர்த்தேக்கத்தில் குறைந்த அளவாக 1,260 மில்லியன் கன அடி நீர் இருந்தால் (பொதுவாக குறிப்பிட்டுள்ளதால் பயன்படுத்த முடியாத இருப்பு நீரை பிரிக்காமல்) ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ந்தேதி முதல் நவம்பர் 30ந்தேதி முடிய 150 நாட்களுக்கு இரு பிரதான கால்வாய்களிலும் தண்ணீர் வழங்க வரையறுக்கப்பட்ட விதிமுறை வகை செய்யப்பட்டுள்ளது.



தற்போது அணையில் 1,225.78 மில்லியன் கன அடி (பயன்படுத்தப்படாத இருப்பு நீர் நீங்கலாக) தண்ணீர் உள்ளது. அணைக்கு கடந்த 15 நாட்களாக 338.55 மில்லியன் கன அடி அல்லது நாள் ஒன்றுக்கு 22.57 மில்லியன் கன அடி (தோராயமாக) நீர் வந்த வண்ணமுள்ளதாலும், நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாலும் மற்றும் எதிர்வரும் பருவமழையினால் பெறப்படும் நீரினையும் கருத்தில் கொண்டு கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்கு நாளை முதல் நவம்பர் 11ந்தேதி வரை 130 நாட்களுக்குதண்ணீர்திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் இடதுபுற கால்வாய் (பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், சவுட்டஹள்ளி, தளிஹள்ளி, மாரிசெட்டிஹள்ளி, பாலேகுளி, நாகோஜனஹள்ளி) வலதுபுற கால்வாய் (கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி, மிட்டஹள்ளி, காவேரிப்பட்டிணம், எர்ரஹள்ளி, பெண்ணேஸ்வரமடம், பையூர், ஜனப்பரஅள்ளி) உள்ள 9,012 ஏக்கர் பாசன பரப்புகள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தரமற்ற உணவால் மாணவர்களுக்கு உடல்நிலை பாதிப்பு: பாலிடெக்னிக் விடுதி கேண்டீனுக்கு சீல்

சென்னை, ஜூலை 6

சென்னை வேப்பேரியில் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரி செயல்படுகிறது. இந்த கல்லூரியின் விடுதி கேண்டீனில் உணவு தரமற்ற முறையில் தயாரிக்கப்படுவதாகவும், இதனை சாப்பிட்ட மாணவர்களுக்கு கடந்த 2 நாட்களாக வாந்தி பேதி உள்ளிட்ட உடல்நலக்கோளாறுகள் ஏற்பட்டு வருவதாகவும் தமிழக அரசின் உணவு பாதுகாப்புத்துறைக்கு புகார்கள் வந்தன.

இதையடுத்து உணவு பாதுகாப்புத்துறை நியமன அதிகாரி சதீஷ்குமார் தலைமையில் என்.ராஜா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர், சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக் விடுதிக்கு சென்று அதிரடி ஆய்வில் ஈடுபட்டனர்.

இதில் கேண்டீனில் உள்ள உபகரணங்கள் சுகாதாரமின்றி இருந்ததும், உணவுகள் தரமற்று இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து உணவின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, கிண்டியில் உள்ள உணவு பகுப்பாய்வு கூடத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. கேண்டீனும் உடனடியாக மூடி சீல் வைக்கப்பட்டது.

## தேசிய நல்லாசிரியர் விருதுக்கு 15ந்தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்: கல்வித் துறை தகவல்

சென்னை, ஜூலை 6

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5ம் தேதி ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நாளில் இந்தியா முழுவதும் சிறப்பாகப் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் சேவையை பாராட்டி மத்திய, மாநில அரசுகள் சார்பில் நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 2024ம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர்விருதுக்குhttp://nationalawardstoteachers.education.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று கல்வித் துறை தெரிவித்துள்ளது.




ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரை தலைவராக கொண்ட மாவட்டக் குழு விண்ணப்பித்த ஆசிரியர்களில் தகுதியானவர்களை தேர்வு செய்து மாநில தேர்வுக் குழுவுக்கு வருகிற 25ந்தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். இந்த மாவட்ட தேர்வுக் குழுவில் மாநில பிரதிநிதியாக ஒருவரும், மாவட்ட கலெக்டரின் பிரதிநிதியாக சிறந்த கல்வியாளர் ஒருவரும் இடம் பெற்று இருப்பார்கள். தேசிய நல்லாசிரியர் விருதுக்கான தகுதியுள்ள ஆசிரியர்களை தேர்வு செய்யும் போது, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குனர் அளித்திருந்த வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருந்துக்கு சென்ற இடத்தில் விரக்தி: கணவரை தவிக்க விட்டு காதலனுடன் புதுப்பெண் ஓட்டம்

ராஜபாளையம், ஜூலை 6

ராஜபாளையம் அருகே உள்ள தென்கரை பகுதியை சேர்ந்தவர் மாரீஸ்வரி (வயது 21) இவருக்கும் ராஜபாளையம் நகர் பகுதியை சேர்ந்த 22 வயது வாலிபருக்கும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அவர்களது திருமணம் கடந்த மாதம் 21ம் தேதி நடந்தது.

இந்நிலையில் மறுவீட்டு விருந்தாக மாரீஸ்வரி தனது கணவருடன் தென்கரையில் உள்ள தாய் வீட்டுக்கு சென்றிருந்தார். இரவு உணவை முடித்துக்கொண்டு அனைவரும் தூங்க சென்றனர். நள்ளிரவில் திடீரென்று தூக்கம் கலைந்த புதுமாப்பிள்ளை அருகில் படுத்திருந்த மனைவி மாரீஸ்வரியை காணாதது கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுபற்றி அவரது குடும்பதாரிடம் கொடுத்த தகவலின்பேரில் உறவினர்களுடன் விடிய விடிய பல்வேறு இடங்களில் தேடியும் மாரீஸ்வரி என்ன ஆனார் என்று தெரியவில்லை. இது குறித்து கீழ ராஜகுலராமன் போலீசில் கணவர் கொடுத்த புகாரில் தனது மனைவி மாயமான விவகாரத்தில் தென்கரையை சேர்ந்த காதலன் சுப்பையா பாண்டியன் என்பவர் மீது சந்தேகம் இருப்பதாக குறிப்பிட்டு இருந்தார். மேலும் திருமணத்திற்கு முன்பு போனில் சிறுதும் சந்தேகம் ஏற்படாதவாறு பேசி தனது எதிர்கால கனவுகளை சிதைத்து விட்டதாகவும் புகாரில் அவர் குறிப்பிட்டு இருந்தார். போலீசார் வழக்குப் பதிவு செய்து மாயமான மாரீஸ்வரியை தேடி வருகின்றனர்.

## தமிழ்நாட்டில் 3 இடங்களில் சதமடித்த வெயில்

சென்னை, ஜூலை 6

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது.எனினும், ஒருசில பகுதிகளில் வெயில் வாட்டி வதைக்கிறது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் 3 இடங்களில் வெயில் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி பதிவாகியுள்ளது. மதுரை விமானநிலையத்தில் 102.38 டிகிரி பாரன்ஹீட்டாகவும், மதுரை நகரில் 101.84 டிகிரி பாரன்ஹீட்டாகவும்,



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் 100.4 டிகிரி பாரன்ஹீட்டாகவும் வெப்பம் பதிவாகியுள்ளது.

## செந்தில் பாலாஜி காவல் 43வது முறையாக நீட்டிப்பு

சென்னை, ஜூலை 6

சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இதையடுத்து ஜாமீன் கோரி செந்தில்பாலாஜி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம், மற்றும் சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தன.



தொடர்ந்து ஜாமீன் கோரி சுப்ரீம் கோர்ட்டில் செந்தில் பாலாஜி மனு தாக்கல் செய்தார். அந்த மனு நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த நிலையில் இன்றுடன் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் முடிவடைந்ததை அடுத்து அவர் காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது அவரது நீதிமன்றக் காவலை வரும் 8ம் தேதி வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி உத்தரவிட்டார். இதன் மூலம் செந்தில் பாலாஜியின் நீதிமன்றகாவல் 43வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

## கைலாசா நாடு எங்கே உள்ளது?



சென்னை, ஜூலை 6

சர்ச்சை சாமியார் நித்தியானந்தாவின் கைலாசா நாடு பற்றிய பரபரப்பு இன்னும் ஓய்ந்தபாடில்லை. கடந்த 2019ம் ஆண்டு நித்தியானந்தா இந்தியாவில் இருந்து தப்பி வெளிநாடு சென்ற நிலையில் அவர் இந்துக்களுக்காக கைலாசா என்ற தனி நாட்டை உருவாக்கி உள்ளதாக அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார். மேலும் அந்த நாட்டுக்கென தனி பாஸ் போர்ட், ரூபாய் நோட்டுகள் உள்ளிட்டவற்றை அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து கைலாசா சார்பில் பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாக கூறி இது தொடர்பான புகைப்படங்களை சமூக வலைதளங்களில் அவரது சிஷ்யைகள் பதிவிட்டனர். அதோடு, கைலாசா நாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் அளித்து உள்ளதாக கூறியிருந்தனர். இதைத்தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தில் கைலாசா பெண் பிரதிநிதிகள் பங்கேற்று பேசியது பெரும் பபரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் கைலாசா சார்பில் பேசிய பெண் பிரதிநிதிகளின் பேச்சு நீக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை சார்பில் அறிவிக்கப்பட்டது. இல்லாத ஒரு நாட்டின் பெயரில் நித்தியானந்தாவும், அவரது சிஷ்யைகளும் ஒரு பிம்பத்தை உருவாக்கி வருவதாக சமூக வலைதளங்களில் ஏராளமானோர் குற்றம் சாட்டிவந்தனர்.

இந்நிலையில் கைலாசா இருக்கும் இடத்தை வருகிற 21ந்தேதி அறிவிக்க போவதாக நித்தியானந்தா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவரது அதிகாரப்பூர்வ இணையதள பக்கத்தில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதில், கைலாசா திறக்கப்பட்டுள்ளது.

வருகிற 21ந்தேதி குரு பூர்ணிமா நன்னாளில் கைலாசா இருக்கும் இடம் அறிவிக்கப்படும். உங்களை அன்போடு வரவேற்கிறோம் என கூறப்பட்டுள்ளது. மேலும் கைலாசா வாசியாக இப்போதே பதிவு செய்யுங்கள் என்று ஒரு ஆன்லைன் லிங்கும் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் கைலாசா எங்கே உள்ளது என்ற கேள்விக்கு 21 ந்தேதி விடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கோயம்பேட்டில் 10 வாகனங்கள் தீப்பிடித்து எரிந்த சம்பவம்: கூலித்தொழிலாளி கைது

சென்னை, ஜூலை 6

கோயம்பேடு பகுதியில் அங்காடி நிர்வாக குழுவிற்கு சொந்தமான வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் தனியார் ஆம்னி பஸ் மற்றும் ஆட்டோ, வேன், கார் உள்ளிட்ட வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. இந்த நிலையில் நேற்று மாலை அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆம்னி பஸ் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இதன் காரணமாக அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 7 ஆட்டோக்கள், வேன், கார் வாகனங்களில் தீ வேகமாக பரவிய நிலையில் அனைத்து வாகனங்களும் தீப்பிடித்து கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தன. புகை விண்ணை முட்டும் அளவிற்கு பரவியது. இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்தவர்கள் தீயணைப்பு போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.



இதையடுத்து, சம்பவ இடத்திற்கு கோயம்பேடு, ஜெ.ஜெ.நகர், அண்ணா நகர் ஆகிய பகுதிகளில்இருந்துவிரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் வாகனங்களில் பற்றிய தீயை தண்ணீரை பீய்ச்சி அடித்து அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போராடி தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த தீவிபத்தில் வாகன நிறுத்தத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆம்னி பஸ், ஆட்டோ உட்பட 10 வாகனங்கள் தீயில் எரிந்து நாசமானது. இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து கோயம்பேடு போலீசார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

அப்பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், பஸ்க்குள் சென்ற ஒருவர் தீ வைத்துவிட்டு வெளியேறும் காட்சிகள் பதிவாகியிருந்தது.

இதையடுத்து, அந்த நபரை உடனடியாக போலீசார் கைது செய்தனர்.

விசாரணையில், பஸ்க்குள் சென்று தீ வைத்த நபர் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பழனி முத்து என்பது தெரியவந்தது. இவர் கோயம்பேடு அங்காடியில் கூலித்தொழிலாளியாக வேலை செய்வதும் தெரியவந்தது. அவரிடம் போலீசார் விசாரணை நடத்தியதில், பீடி குடிப்பதற்காக பஸ்க்குள் வந்த போது எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார். எனினும் முன்னுக்கு பின் முரணாக பேசி வருவதால் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

## நடைபாதையின் குறுக்கே படுத்திருந்த போதை ஆசாமி: திருப்பூரில் பரபரப்பு



திருப்பூர், ஜூலை 6

தமிழகத்தில் விஷ சாராயத்தால் பல உயிர்கள் பறிபோன கள்ளக்குறிச்சி சம்பவம் அனைவர் மனதை விட்டும் நீங்கா வடுவாக உள்ளது. இதன் எதிரொலியாக போதைப்பழக்கத்திற்கு எதிரான எண்ணம் மக்களிடம் அதிகரித்துள்ளது. குடி, குடியை கெடுக்கும் என்பது பல நேரங்களில் விஸ்வரூபம் எடுக்கும் போது மட்டும் இது தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

இது ஒரு புறமிருந்தாலும், ஒவ்வொரு ஊர்களிலும் போதையால் மதிமயங்குபவர்கள் பாதைகளில் படுத்து உருளும் சம்பவம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. பெரும்பாலும் டாஸ்மாக் கடைகளின் அருகிலும், பஸ் நிலையங்களிலும் போதை ஆசாமிகள் சாலையில் படுத்து கிடப்பார்கள்.

இந்த நிலையில், நேற்று மாலை நேரத்தில் ஒருவர்திருப்பூர்மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் உள்ளே செல்லும் நடைபாதையில் படுத்து கிடந்தார். கண்கள் கிறங்கியவாறு இவர் இருந்ததற்கு போதைகாரணமா? என்பது தெரியவில்லை. ஆனால் யாரும் நடந்து செல்ல முடியாதபடி நடைபாதையின் குறுக்காக படுத்து உருண்டு கொண்டிருந்தார். இதனால் மாலை நேரத்தில் பணி முடிந்து வீட்டிற்கு சென்ற பெண் ஊழியர்கள் அச்சத்துடன் சென்றனர்.

நடைபாதையை பயன்படுத்த முடியாமல் பலரும் ரோட்டில் நடந்து சென்றதால் வாகனங்கள் செல்லவும் இடையூறு ஏற்பட்டது.

இவ்வழியாக ஏராளமானோர் சென்ற போதிலும் அவர் எந்த சலனமும் இன்றி படுத்து கிடந்தார். உச்சபட்ச அதிகாரம் கொண்ட கலெக்டர் அலுவலகத்திலேயே ஒருவர் இப்படி படுக்க முடிகிறதே என பலரும் புலம்பியபடி சென்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதி பரபரப்பாக காணப்பட்டது.

## மின்சாரம் தாக்கி 10 மாத குழந்தை உயிரிழப்பு... பாட்டி கண்முன்னே பரிதாபம்


சேலம், ஜூலை 6

சேலம் வைத்திஉடையார் காட்டு பகுதியைச் சேர்ந்தவர் நேதாஜிகுமார். இவருடைய மனைவி நந்தினி (வயது 27). இருவரும்தனியார்நிறுவனத்தில் வேலை பார்த்து வருகின்றனர். இவர்களது 10 மாத பெண்குழந்தைஇனன்யா. கணவன், மனைவி இருவரும் வேலைக்கு செல்லும்போது இவர்களது வீட்டின் அருகில் உள்ள நந்தினியின் தாய் கலைச்செல்வியிடம் குழந்தையை விட்டு செல்வது வழக்கம். கலைச்செல்வி மின்மோட்டாருடன் கூடிய தையல் எந்திரம் வைத்து வீட்டிலேயே துணிகள் தைக்கும் தொழில் செய்து வருகிறார். நேற்று முன்தினம் கணவன், மனைவி இருவரும் வேலைக்கு செல்லும் முன்பு வழக்கம்போல குழந்தையை பாட்டி வீட்டில் விட்டு சென்றனர். குழந்தை அங்கும், இங்கும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தது. கலைச்செல்வி துணி தைத்துக்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை இனன்யா, திடீரென தையல் எந்திரத்துக்கு செல்லும் மின்ஒயரில் கை வைத்ததாக தெரிகிறது. இதில் பாட்டி கலைச்செல்வி கண்முன்னாலேயே மின்சாரம் தாக்கி குழந்தை தூக்கி வீசப்பட்டு பரிதாபமாக உயிரிழந்தது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 6.7.2024

# நீச்சல் உடையில் ரசிகர்களை கிறங்கடிக்கும் கதாநாயகிகள்



தென்னிந்திய திரை உலகில் நடித்து வரும் கதாநாயகிகள் பலர் தனது கவர்ச்சி தோற்ற படங்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டு ரசிகர்களை கவர்ந்திழுத்து வருகின்றனர். அந்த வகையில் சமந்தா, மாளவிகா மோகனன், துஷாராவிஜயன், சான்யா அய்யப்பன், திவ்யபாரதி, சாக்ஷி அகர்வால் உள்பட நீச்சல் உடையில் படங்களை வெளியிட்டு ரசிகர்களை கிறங்கடித்து வருகின்றனர்.

மாளவிகா மோகனன்: ரஜினிகாந்துடன் பேட்ட, விஜய்யுடன் மாஸ்டர் ஆகிய படங்களில் நடித்தவர் மாளவிகா மோகனன். சினிமா நடிப்பை விட சமூக வலைதளங்களில் அவர் வெளியிட்டு வரும் படங்கள் அதிக கவர்ச்சி தோற்றத்தில் அமைந்திருக்கும். சமீபத்தில் மாலத்தீவில் பிகினி உடையில் நின்றபடி எடுத்த புகைப்படங்கள் வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

சமந்தா: பிரபல நடிகையான சமந்தா அஞ்சான் படத்தில் ஒரு பாடல் காட்சியில் பிகினி உடையில் நடனமாடினார். சமீபத்தில் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது பிகினி உடையில் எடுத்த புகைப்படங்களை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

துஷாரா விஜயன்: சார்பட்டா பரம்பரை, அநீதி, ராயன், வேட்டையன் போன்ற படங்களில் நடித்துள்ள துஷாரா விஜயன் அடிக்கடி பிகினி உடையில் எடுத்த புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

திவ்யபாரதி: பேச்சுலர் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான திவ்யபாரதி தமிழ், தெலுங்கு மொழிகளில் பல படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் மாலத்தீவு கடற்கரையில் நீச்சல் உடையில் எடுத்த புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். இதேபோல சான்யா அய்யப்பன்,திஷாபதானி, மவுனிராய், லட்சுமிராய் உள்பட பலர் புகைப்படங்களை வெளியிட்டு வருகின்றனர்.

# ராயன் படத்தின் 3வது பாடல் வெளியீடு



நடிகர் தனுஷின் 50வது படமாக உருவாகும் 'ராயன்' திரைப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. தனுஷ் இயக்கி நடிக்கும் இந்த படத்தில் துஷாரா விஜயன், சந்தீப் கிஷன், காளிதாஸ் ஜெயராம், எஸ்.ஜே.சூர்யா, அபர்ணா பாலமுரளி ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார். வடசென்னையை கதைக்களமாக கொண்டு இந்த திரைப்படம் உருவாகி வருவதாக கூறப்படுகிறது. இந்த படத்தில் இருந்து 'அடங்காத அசுரன்', 'வாட்டர் பாக்கெட்' ஆகிய பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றன.

இந்நிலையில், ராயன் படத்தின் 3வது பாடல் 'ராயன் ரம்பிள்' நாளை வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா வரும் 6ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சல்மான்கானின் 'சிக்கந்தர்' படத்தில் இணைந்த நடிகர் சத்யராஜ்



சல்மான்கான் நடிக்கும் 'சிக்கந்தர்' படத்தில் நடிகர் சத்யராஜ் இணைந்துள்ளதாக படக்குழுவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் புதிய படத்தில் கதாநாயகனாக பாலிவுட் நடிகர் சன்மான்கான் நடிக்கிறார். இந்த படத்துக்கு 'சிக்கந்தர்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு "புராணக் கதை' படமாகும். இப்படத்தில் சல்மான்கானுக்கு ஜோடியாக நடிகை ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார்.

இப்படத்தை பிரபல தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலா தயாரிக்கிறார். மேலும் சல்மான்கான் 10 ஆண்டுகளுக்கு பிறகு தயாரிப்பாளர் சஜித் நதியத்வாலாவுடன் இணைந்து பணியாற்ற உள்ளார். இப்படத்திற்கானபுதியஅப்டேட்டைபடக்குழுவினர்தங்களதுஇன்ஸ்டாகிராம்பக்கத்தில்வெளியிட்டுள்ளனர். அதில்பாகுபலிபடத்தில்முக்கியகதாபாத்திரத்தில்நடித்தநடிகர்சத்யராஜைவரவேற்பதில்மிகுந்தமகிழ்ச்சிஅடைகிறோம் என்று பதிவிட்டுள்ளனர். மேலும் இந்தப்படத்தில் நடிகர் பிரதீக் பாப்பரும் இணைத்துள்ளதாக இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர்.

இதற்கிடையில், ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கிய 'சிகந்தர்' படத்தின் படப்பிடிப்பு ஜூன் 19 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. மேலும் இந்தப்படத்தினை 2025ம் ஆண்டு ரமலான் அன்று திரையரங்குகளில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

# 'கோட்' பட டைரக்டரை அமெரிக்காவில் சந்தித்த விஜய்சேதுபதி



'கோட்' பட டைரக்டர் வெங்கட்பிரபுவை நடிகர் விஜய்சேதுபதி அமெரிக்காவில் சந்தித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் முக்கிய மற்றும் முன்னணி இயக்குநராக பணியாற்றி வருபவர் வெங்கட் பிரபு. சென்னை 28, சரோஜா, கோவா, மங்காத்தா ஆகிய திரைப்படங்கள் மூலம் ரசிகர்கள் மத்தியில் ஏகபோக வரவேற்பை பெற்றவர். இவரது இயக்கத்தில் இறுதியாக கஸ்டடி திரைப்படம் வெளியானது. இப்படத்தில் பிரபல தெலுங்கு நடிகர் நாக சைதன்யா மற்றும் கிருத்தி ஷெட்டி ஆகியோர் நடித்திருந்தனர். இத்திரைப்படம் தமிழ் மற்றும் தெலுங்கில் வெளியாகி கலவையான விமர்சனங்களை பெற்றது.

இதைத்தொடர்ந்துதற்போதுவிஜய்நடிக்கும்திகோட்திரைப்படத்தை இயக்கி வருகிறார். ஏஜிஎஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசை அமைக்கிறார். மேலும், சினேகா, லைலா, மீனாட்சி சௌத்ரி, பிரபுதேவா, பிரசாந்த், மோககன், அஜ்மல் உள்படபலர்முக்கியகதாபாத்திரங்களில்நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்புஒருபக்கம்இருக்க, பின்னணிவேலைகள்விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. விஎப்எக்ஸ் பணிகளுக்காக இயக்குநர் வெங்கட் பிரபு அமெரிக்காவில் உள்ளார்.

இந்நிலையில், வெங்கட்பிரபு "மகாராஜா" படக்குழுவினர், விஜய் சேதுபதி மற்றும் டைரக்டர் நித்திலன் சாமிநாதனை நேரில் சந்தித்து படம் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்தார். அவருடன் எடுத்த செல்பியை தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்து, 'இது லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்திருக்கிறது' என மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நடிகர் சூரியையும் வெங்கட்பிரபு சந்தித்து இருக்கிறார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

'மகாராஜா' திரைப்படம் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் சிறப்பு திரையிடலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு, 'மகாராஜா' படக்குழு அமெரிக்கா சென்றிருக்கிறது. அங்குதான் இவர்களை சந்தித்திருக்கிறார் வெங்கட்பிரபு.

# ஏழு கடல் ஏழு மலை படத்தின் 2வது பாடல் குறித்த அறிவிப்பு




'ஏழு கடல் ஏழு மலை' படத்தின் 2வது பாடலான 'ஏழேழு மலை' எனும் பாடல் நாளை வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

பிரபல இயக்குனர் ராம் எதார்த்தமான படங்களை இயக்கி ரசிகர்கள் மனதை வென்றவர். இவர் கற்றது தமிழ், தங்க மீன்கள், பேரன்பு,தரமணிஉள்ளிட்டவெற்றிபடங்களை இயக்கியுள்ளார்.

நீண்ட நாட்களுக்கு பின் ராம் இயக்கத்தில் நிவின் பாலி, அஞ்சலி, சூரி நடித்திருக்கும் திரைப்படம் ஏழு கடல் ஏழு மலை. யுவன் சங்கர் ராஜா இசையமைக்கும் இத்திரைப்படத்திற்கு ஏகாம்பரம் ஒளிப்பதிவு செய்துள்ளார். மாநாடு படத்தைத் தொடர்ந்து தயாரிப்பாளர்சுரேஷ்காமாட்சிதனதுவிஹவுஸ் புரொடக்ஷன்ஸ் சார்பில் இப்படத்தை தயாரிக்கிறார்.

இந்த படத்தின் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் சமீபத்தில் ரோட்டர்டாம் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அதன் பின்னர் ரஷ்யாவின் மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அந்த இரண்டு விழாக்களிலும் இந்த படத்துக்கு நல்ல வரவேற்பும் பாராட்டுகளும் கிடைத்தன.

இதனைத் தொடர்ந்து டிரான்சில்வேனியா திரைப்பட விழாவுக்கு இந்த படம் தேர்வு செய்யப்பட்டது. ஜனவரி மாதம் இப்படத்தின்கிளிம்ப்ஸ்வீடியோவைவெளியிட்டதைத்தொடர்ந்துஇணையத்தில்இக்காட்சிகள்பரவலாகபேசப்பட்டன. ராமின் முதல் படமான கற்றது தமிழ் பாணியில் காட்சிகள் அமைக்கப்பட்டதாக கருத்துக்களை பகிர்ந்தனர்.

இதன் பின்னர் இப்படத்தின் முதல் பாடலான 'மறுபடி நீ' என்னும் பாடலை பிப்ரவரி மாதம் படக்குழு வெளியிட்டது. இப்பாடலை பாடலாசிரியர் மதன்கார்க்கி எழுத நடிகர் சித்தார்த் பாடியிருந்தார். இந்த நிலையில் 'ஏழு கடல் ஏழு மலை' திரைப்படத்தின் 2வது பாடல் 'ஏழேழு மலை' எனும் பாடல் நாளை மாலை 6 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. யுவன் சங்கர் ராஜா இசையில் சந்தோஷ் நாராயணன் இந்த பாடலை பாடியுள்ளார்.

# டி.என்.பி.எல். கிரிக்கெட் சேலத்தில் தொடக்கம்: முதல் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் கோவை கிங்ஸ் மோதல்




தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் டி.என்.பி.எல். கிரிக்கெட் 2016ம் ஆண்டு அறிமுகம் ஆனது. இதுவரை 7 சீசன் நடந்துள்ளது. இதில் அதிகபட்சமாக சேப்பாக் சூப்பர் கில்லீஸ் 4 முறை சாம்பியன் கோப்பையை கைப்பற்றி வெற்றிகரமான அணியாக விளங்குகிறது. தூத்துக்குடி பேட்ரியாட்ஸ், மதுரை பாந்தர்ஸ், கோவை கிங்ஸ் ஆகிய அணிகளும் பட்டம் வென்றுள்ளன. டி.என்.பி.எல். கிரிக்கெட்டில்கலக்கும்வீரர்களுக்குஐ.பி.எல்.ல் ஆடும்அதிர்ஷ்டம் அடிப்பதால் இளம் வீரர்கள் எப்போதும் தங்களது முழு திறமையை வெளிக்காட்ட முயற்சிப்பார்கள். வேகப்பந்து வீச்சாளர் டி. நடராஜன், சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்ரவர்த்தி, ஆல்ரவுண்டர் ஷாருக்கான் உள்ளிட்டோர் டி.என்.பி.எல்.ல் அபாரமாக ஆடியதாலேயே ஐ.பி.எல். ஏலத்தில் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் 8வது டி.என்.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. சேலம், நெல்லை, கோவை, நத்தம் (திண்டுக்கல்), சென்னை ஆகிய 5 நகரங்களில் நடைபெறும் இந்த போட்டியில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ், நடப்பு சாம்பியன் கோவை கிங்ஸ், திண்டுக்கல் டிராகன்ஸ் உள்பட 8 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும். 2வது தகுதி சுற்று மற்றும் இறுதிப்போட்டி மட்டும் சென்னை சேப்பாக்கத்தில் அரங்கேறும். இறுதிப்போட்டி ஆகஸ்ட் 4ந்தேதி நடக்கிறது. இந்த போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.1.7 கோடியாகும். இதில் மகுடம் சூடும் அணிக்கு ரூ.50 லட்சமும், 2வது இடத்தை பிடிக்கும் அணிக்கு ரூ.30 லட்சமும் வழங்கப்படுகிறது.

நடப்புடி.என்.பி.எல்.கிரிக்கெட்டில்முதல்சுற்றுஆட்டங்கள்சேலத்தில்நடக்கிறது.சேலம்அருகேவாழப்பாடியில் உள்ள சேலம் கிரிக்கெட் பவுண்டேசன் ஸ்டேடியத்தில் இன்று இரவு நடக்கும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கோவை கிங்சும், முன்னாள் சாம்பியன் சேப்பாக் சூப்பர் கில்லீசும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

சென்னை அணியில் பாபா அபராஜித், ஜெகதீசன், ரஞ்சன் பால், பெரியசாமி, ரஹில் ஷா, ஷாஜகான், அபிஷேக் தன்வர், சிலம்பரசன் ஆகியோர் நன்றாக ஆடக்கூடியவர்கள். இதே போல் கோவை அணிக்கு கேப்டன் ஷாருக்கான், முகிலேஷ், தாமரைக் கண்ணன், சித்தார்த், சுரேஷ்குமார், முகமது உள்ளிட்டோர் வலு சேர்க்கிறார்கள்.

இரு அணிகளும் இதுவரை 10 முறை நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் 6ல் சேப்பாக் சூப்பர் கில்லீசும், 3ல் கோவையும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு ஆட்டத்தில் முடிவில்லை. ஏறக்குறைய சரிசம பலத்துடன் வெற்றியோடு தொடங்கும் உத்வேகத்துடன் மல்லுக்கட்டுவதால் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது.

போட்டிக்கான இரு அணி வீரர்கள் விவரம் வருமாறு:

சேப்பாக் சூப்பர் கில்லீஸ்: பாபா அபராஜித் (கேப்டன்), ஆந்த்ரே சித்தார்த், வி.அருணாசலம், அஸ்வின் கிறிஸ்ட், டேரில் பெராரியோ, அய்யப்பன், என்.ஜெகதீசன், ஜிதேந்திர குமார், மதன்குமார், ஜி.பெரியசாமி, பிரேம்குமார், பிரதோஷ் ரஞ்சன் பால், சந்தோஷ்குமார், ஆர்.சதீஷ், ரஹில் ஷா, ஷாஜகான், சிபி, எம்.சிலம்பரசன், பி.சூர்யா, அபிஷேக் தன்வர்.

கோவை கிங்ஸ்: ஷாருக்கான் (கேப்டன்), சுரேஷ்குமார், சுஜய், அதீக் ரகுமான், திவாகர், கவுதம் தாமரைக்கண்ணன், ஹேம் சரண், மீரான் ரஹில் ரகுமான், முகிலேஷ், ஓம் பிரகாஷ், ராம் அரவிந்த், சாய் சுதர்சன், எம்.சித்தார்த், ஜதாவேத் சுப்பிரமணியன், வித்யூத், ஜி.வி.விக்னேஷ், யுதீஸ்வரன், மணிஷ், சச்சின்.

இரவு 7.15 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை ஸ்டார்ஸ்போர்ட்ஸ் தமிழ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

# இந்தியாதென்ஆப்பிரிக்கா பெண்கள் முதலாவது டி20 கிரிக்கெட் சென்னையில் நடக்கிறது



லாராவோல்வார்ட் தலைமையிலான தென்ஆப்பிரிக்க பெண்கள் கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதில் இந்திய அணி ஒருநாள் தொடரை 30 என்ற கணக்கிலும், சென்னையில் நடந்த ஒரே ஒரு டெஸ்ட் போட்டியை 10 விக்கெட் வித்தியாசத்திலும் வென்றது.

இந்த நிலையில் இந்தியாதென்ஆப்பிரிக்கா பெண்கள் அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் முதலாவது ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று (சனிக்கிழமை) இரவு 7 மணிக்கு நடக்கிறது. ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய அணி தனது ஆதிக்கத்தை தொடருவதுடன், தொடரை வெற்றியுடன் தொடங்க ஆர்வம் காட்டும். அதேநேரத்தில் தென்ஆப்பிரிக்க அணி முந்தைய தோல்விக்கு பதிலடி கொடுக்க முயற்சிக்கும். எனவே இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு குறைவு இருக்காது. போட்டியை ஸ்போர்ட்ஸ் 18 சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

இதற்கிடையே, இந்த ஆட்டத்துக்கான டிக்கெட் விற்பனை (ஜி ஸ்டாண்டு மேல் தளம், ரூ.100) ஸ்டேடியத்தில் உள்ள11ம்நம்பர்நுழைவுவாயிலில்இன்றுபிற்பகல்3மணிக்குதொடங்கிநடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1,300 டிக்கெட் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விம்பிள்டன் டென்னிஸ்: 3வது சுற்றுக்கு முன்னேறினார் ஸ்வெரேவ்



டென்னிஸ் போட்டியில் ஆண்டுதோறும் 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் மிகவும் கவுரவமிக்கதாக கருதப்படும் நூற்றாண்டு காலம் பழமையான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்கா வீரர் மார்கோஸ் ஜிரோன் ஜெர்மனி வீரர் ஸ்வெரேவ் ஆகியோர் மோதினர். பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்வெரேவ் 62,61,64 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

# டி20 உலகக்கோப்பையை 11 ஆண்டுகள் காத்திருந்த ரசிகர்களுக்கு அர்ப்பணிக்கிறேன்: ரோகித் சர்மா




ஐ.சி.சி. டி20 உலகக்கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றி கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக வீரர்கள் மும்பையில் திறந்த பஸ்சில் ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டனர்.

பிரமாண்டமான பேரணி முடிந்ததும் இந்திய வீரர்களுக்கு மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் பாராட்டு விழா நடந்தது. இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் ரோஜர் பின்னி, செயலாளர் ஜெய் ஷா ஆகியோர் உலகக்கோப்பையை வென்றதற்காக ரூ.125 கோடியை ஊக்கத்தொகையாக வழங்கினர்.

இந்த நிகழ்வில் ரசிகர்கள் மத்தியில் இந்திய கேப்டன் ரோகித் சர்மா பேசுகையில் 'சிறப்பு வாய்ந்த இந்த அணியை வழிநடத்தியதில் நான் அதிர்ஷ்டசாலி. அணியில் உள்ள அனைத்து வீரர்களும் சிறப்பாக செயல்பட்டனர். குறிப்பாக இறுதி ஆட்டத்தின் கடைசி ஓவரில் ஹர்திக் பாண்ட்யாவின் பந்து வீச்சு அற்புதமாக இருந்தது.

மும்பை ஒரு போதும் ஏமாற்றம் அளித்தது கிடையாது. ரசிகர்களின் வரவேற்பு மெய்சிலிர்க்க வைத்தது. அணி சார்பில் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வெற்றி கோடிக்கணக்கான மக்களின் முகத்தில் புன்னகையை கொண்டு வந்திருக்கிறது. இந்த உலகக்கோப்பை ஒட்டுமொத்த தேசத்திற்குரியது. ஐ.சி.சி. கோப்பைக்காக கடந்த 11 ஆண்டுகள் காத்திருந்த ரசிகர்களுக்கு இதை அர்ப்பணிக்கிறேன்' என்று கூறினார்.



**பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்**
**மக்கட் பதடி யெனல்**

**விளக்கம்:**

**பயனில்லாத சொற்களைப் பலமுறையும் சொல்லுகின்ற ஒருவனை மனிதன் என்று சொல்லக்கூடாது, மக்களுள் பதர் என்று சொல்லவேண்டும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.